

## 3.1.1 அல் அக்லாக்

- ❖ முஸ்லிம்கள் நற்குணங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- ❖ நற்குணத்துடன் வாழ்வது நபியின் வழிமுறையாகும்.
- ❖ நற்குணத்தின் மூலம் பிறர் உள்ளத்தை வெற்றிகொள்ளலாம்.
- ❖ நற்குணமுடையோன் எல்லோராலும் விரும்பப்படுவான்.
- ❖ உண்மையாளன் சுவனம் புகுவான்.

முஸ்லிமின் வாழ்க்கை நன்னடத்தையின் இருப்பிடமாக இருக்க வேண்டும். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நற்குணங்கள் நிரம்பப் பெற்ற ஒருவராகவே திகழ்ந்தார்கள். அவர்கள் சிறு வயது முதல் நம்பிக்கைக்குரியவர்களாகத் திகழ்ந்தார்கள். அதனால்தான் மக்கள் அவரை 'அல் அமீன்' என அழைத்தனர். நம்பிக்கைக்குரியவர் என்பது அதன் பொருளாகும்.

### உண்மை, வாக்குமீறாமை

நம்பிக்கையோடு நடப்பவன் உண்மையே பேசுவான். உண்மை பேசுபவன் அளித்த வாக்கை மீறமாட்டான். முன்னுக்குப் பின் முரணாக நடக்கமாட்டான். எவனிடம் நான்கு குணங்கள் இடம்பெறுமோ அவன் நயவஞ்சகன் ஆவான். அவற்றில் ஒன்றேனும் ஒருவனிடம் காணப்பட்டால் அதனை விடும் வரை அவனிடம் நயவஞ்சகம் குடிகொண்டிருக்கும். நயவஞ்சகர்கள் முனாபிக்குகள் எனப்படுவர். அவர்களுக்குரிய இடம் நரகமாகும். ஒரு மு∴மினிடம் இது இருத்தலாகாது.


இலவச விநியோகத்திற்காக

நயவஞ்சகர்களின் குணங்களாவன (1) நம்பினால் ஏமாற்றுவான். (2) பேசினால் பொய்யுரைப்பான். (3) உடன்படிக்கை செய்தால் மோசடி செய்வான். (4) தர்க்கித்தால் கெட்ட வார்த்தை பேசுவான் (ஸஹீஹ புகாரி, ஸஹிஹ் முஸ்லிம்).

## பொறுமை, சகிப்புத்தன்மை

ஒரு மு.்.மினிடம் காணப்பட வேண்டிய மற்றுமொரு குணம் பொறுமையாகும். மனித வாழ்வில் பிரச்சினைகளும், கஷ்டங்களும் ஏற்படுவது இயல்பு. அவ்வேளைகளில் நாம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். சகித்துக் கொள்ள முடியாத அளவு பிரச்சினை அதிகரித்தால்,

اَللّٰهُمَّ أْجُرْنِيْ فِيْ مُصِيْبَتِيْ وَاخْلُفْ لِيْ خَيْرًا مِنْهَا. (رَوَاهُ مُسْلِم)

இறைவா! எனக்கேற்பட்ட பிரச்சினைகளிலிருந்து என்னைக் காத்தருள்வாயாக. மேலும் அதை விடச் சிறந்த ஒன்றைத் தருவாயாக என கேட்கவேண்டும். ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மகன் இப்ராஹீம் இறந்த போது கண்கலங்கிய நிலையில் பிள்ளையைக் கையிலெடுத்தார்கள். நிச்சயமாக கண்கள் கண்ணீரைக் கொட்டுகின்றன, உள்ளம் கவலைப்படுகிறது, உம் பிரிவிற்காக நாம் கவலைப்படுகிறோம். (எனினும்) அல்லாஹ்வுக்கு திருப்தியளிக்கும் “இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்” (நாம் அல்லாஹ்வுக்காக இருப்பவர்கள், மேலும் நாம் அவன்பாலே மீட்டப்படுவோம்) என்ற வசனத்தை அல்லாமல் வேறொன்றையும் சொல்லமாட்டேன் என்றார்கள்.

கஷ்டங்களிலும், துன்பங்களிலும் சிக்குண்டு தவிக்கும் வேளை தைரியத்தைத் தரும் இவ்வசனத்தைச் சொல்வதற்குப் பழகிக்கொள்ள வேண்டும்.

## வெட்கம்

மு.்.மினிடம் காணப்பட வேண்டிய மற்றுமொரு நற்குணம் வெட்க உணர்வாகும். வெட்கமில்லாதவன் எதையும் செய்யத் துணிவான். அதன் மூலம் கேவலப்படுவான். ஒரு முறை ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அன்ஸாரித் தோழர்களிலொருவருக்கு அருகாமையால் சென்றார்கள். அவர் மற்றொருவரை நோக்கி வெட்க உணர்வின் அவசியம் பற்றிக் கூறிக்கொண்டிருந்தார். அதனைச் செவியுற்ற நபியவர்கள் “அவரை விட்டு விடு நிச்சயமாக வெட்க உணர்வு ஈமானைச் சேர்ந்ததாகும்” எனக் கூறினார்கள். (புஹாரி முஸ்லிம்)

## முதியோரை மதித்தல்

மற்றொரு அருங்குணம் முதியோரை மதித்தலாகும். பெற்றோர், ஆசிரியர் முதலான மூத்தோரைக் கனம் பண்ண வேண்டும். அவர்கள் சொல்வதைக் கேட்பதும், தேவைப்படும் போது அவர்களுக்கு உதவுவதும், முதுமை காரணமாகத் தட்டுத் தடுமாறும்போது கைப்பிடித்து உதவுவதும் எமது பணியாகும். வயோதிபர் ஒருவரை அவரது வயோதிபத்துக்காக கண்ணியப்படுத்தும் வாலிபனுக்கு அவன் வயோதிபத்தை அடையும் காலத்தில் உதவி செய்யும் மற்றொருவனை அல்லாஹ் ஏற்படுத்திவிடுவான் என்பது நபிமொழியாகும்.

### பயிற்சிகள்

**பின்வரும் வசனங்களில் சரியானவைகளுக்கு (✓) எனவும் பிழையானவற்றிற்கு (✗) எனவும் அடையாளமிடுக.**

1. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பருவ வயதை அடைய முன்னரும், அடைந்த பின்னரும் நற்குணமுள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். ( )
2. உண்மை பேசுபவர்களுக்குரிய இடம் சுவனலோகமாகும். ( )
3. அல் அமீன் என்ற பதம் நயவஞ்சகன் என்ற பொருளைத் தரும். ( )
4. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மகன் இப்ராஹீமாவார். ( )
5. நற்குணமுடையார் பிறர் உள்ளத்தை வென்று கொள்வார் ( )

(02) எம்மிடம் காணப்படவேண்டிய நற்பண்புகள் சிலவற்றைப் பட்டியல் படுத்துக.


இலவச விநியோகத்திற்காக

## 3.2.1 தலைமைத்துவத்துக்குக் கட்டுப்படுவோம்

- ➢ மூத்தோர் சொற் கேட்பது அருங்குணமாகும்.
- ➢ முதியோரைக் கனம் பண்ணுதல் சிறந்த பண்பாகும்.
- ➢ ஜமாஅத் தொழுகையும், ஏனைய கூட்டுத் தொழுகைகளும் தலைமைத்துவப் பயிற்சியைத் தருகின்றன.
- ➢ பள்ளிவாசலுடனான தொடர்புகளே சமூகத்தை வழிநடாத்த உதவும்.

விடுமுறை கழிந்து பாடசாலை ஆரம்பமாகியது. ஏழாம் வகுப்பு மாணவர்கள் எல்லோரும் சமூகமளித்திருந்தனர். மாணவர்களது வருகை கண்டு வகுப்பாசிரியர் சந்தோஷப்பட்டார். அன்று முதல் நாளாக இருந்ததால் ஆசிரியர் மாணவர்களோடு அளவளாவினார். விடுமுறையைக் கழித்த விதம், பெற்ற பயன்கள் என்பன பற்றி மாணவரிடம் கேட்டறிந்தார்.

ஆசிரியர் :- இந்த விடுமுறை எப்படிக் கழிந்தது?

மாணவர்கள் :- அல்ஹம்துலில்லலாஹ் மிகவும் சிறப்பாகக் கழிந்தது.

ஆசிரியர் :- எல்லோருக்குமே சிறப்பாகக் கழிந்தது எப்படி? விபரமாகக் கூறுங்கள் பார்ப்போம்.

நஸீர் :- விடுமுறையில் எங்கள் ஊரில் மாணவர் பயிற்சி முகாம் ஒன்று நடைபெற்றது. இந்த முகாம் பற்றிப் பள்ளிவாசல் நிருவாகிகள் அறிவித்தனர். கொழும்பிலுள்ள ஒரு ஸ்தாபனம் இதனை ஒழுங்கு செய்திருந்தது. பள்ளிவாசல் தலைவரின் அறிவித்தலை அடுத்து நாமெல்லோரும் குறித்த இடத்துக்குச் சமூகமளித்தோம்.

ஆசிரியர் :- அந்த அழைப்பை எந்த வகுப்பு மாணவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்?


இலவச விநியோகத்திற்காக

நஸீர் :- ஏழாம், எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கென்றே அந்த முகாம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. எங்கள் ஊர் மக்கள் பள்ளித் தலைவருக்கு எப்போதும் கட்டுப்பட்டு நடப்பர். அதனால் அவரது அறிவித்தலை ஏற்று எமது பெற்றோர் ஊரிலிருந்த ஏழாம், எட்டாம் வகுப்பு மாணவர்கள் சகலரையும் கலந்துகொள்ளச் செய்தனர்.

ஆசிரியர் :- முகாம் எத்தனை தினங்களாக நடைபெற்றது? நிகழ்ச்சி நிரல்கள் எப்படி இருந்தன?

நஸீர் :- முகாம் ஒரு வாரகாலம் நீடித்தது. அதில் 350 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். அவர்கள் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். நாளுக்கு ஒரு தலைவர் என்ற அடிப்படையில் குழுக்கள் இயக்கப்பட்டன. அதிகாலை நித்திரைவிட்டெழுந்து 4.30 மணிக்கு தஹஜ்ஜுத் தொழுதோம். பஜ்ர் தொழுகைக்கான நேரம் வந்ததும் அதான் சொல்லப்படும். அதையும் ஒவ்வொருவரும் மாறி மாறிச் செய்தனர். பின்னர் தொழுகை ஜமாஅத்தாக நிறைவேற்றப்படும். இந்தப் பயிற்சியும் சகலருக்கும் கிடைத்தது. பஜ்ர் தொழுகை முடிந்த பின் குர்ஆனின் சிறிய ஸூறாக்கள் சில விளக்கப்பட்டன. காலைக்கடன்கள் முடிவுற்ற பின்னர் பாடங்கள், பொழுது போக்குகள், கணினிப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. மாலையில் விளையாட்டு இடம்பெற்றது.

ஆசிரியர் :- பாடங்களில் உங்களை மிகவும் கவர்ந்த தலைப்பு எது?

நஸீர் :- “முதியோரைக் கனம் பண்ணுவோம்” என்ற தலைப்பு மிகச்சிறப்பாக இருந்தது. அதேவேளை “தலைமைத்துவத்துக்குக் கட்டுப்படுவோம்” என்ற விசேட நாடகம் ஒன்றும் நடிக்கப்பட்டது.

ஆசிரியர் :- சரி உங்கள் நிகழ்ச்சி நிரலைக் கூறிவிட்டீர்கள். அல்ஹம்து லில்லாஹ். இந்தப் பயிற்சி முகாமில் மாணவியர் பங்குபற்றவில்லையா?

| | | |
|---|---|---|
| நஸீர் | :- | நான் கூற மறந்துவிட்டேன். குறிப்பிட்ட அதே தினம் எமது ஊர் பெண்கள் பாடசாலையில் பெண் களுக்கான பயிற்சி முகாமும் நடந்து முடிந்தது. அங்கும் பெண்களுக்குப் பொருத்தமான நிகழ்ச்சி நிரல் போடப்பட்டிருந்ததாக எட்டாம் தரத்தில் படிக்கும் எனது சகோதரி கூறினாள். |
| ஆசிரியர் | :- | நஸீர்! உனது சகோதரியிடம் அவர்களின் முகாம் பற்றிக் கேட்டுப் பார்க்கவில்லையா? |
| நஸீர் | :- | கேட்டேன் ஸேர். மிகவும் சிறப்பாக இருந்ததாகக் கூறினார். எமக்கிருந்தது போலவே ஆசிரியைகளின் வழிகாட்டலோடு அங்கும் நிகழ்ச்சிகள் நடந்தனவாம். ''ஒரு பெண்பிள்ளை தாய்க்கு எவ்வாறு உதவியாக இருக்க வேண்டும் என்பது பற்றியும், அங்கங்களை எவ்வாறு மறைத்தல் வேண்டும் என்பது பற்றியும் இடம்பெற்ற நிகழ்ச்சிகள் நன்றாக இருந்தன என எனது சகோதரி குறிப்பிட்டாள். |
| ஆசிரியர் | :- | நீங்கள் எப்போதும் முதியோரையும், ஆசிரியர்களையும் மதித்து அவர்கள் சொற்கேட்டு நடக்க வேண்டும். கிராம மட்டத்தில் தலைமை வகிக்கும் பள்ளி நிருவாகம் காட்டும் நல்ல வழிகளைத் தொடர வேண்டும். நீங்கள் பெற்ற பயிற்சியை தொடர்ந்து கடைப்பிடித்து வாருங்கள். அப்போது உங்களுக்கு அல்லாஹ்வின் அருள்கிட்டும். |

சிறந்ததொரு பயிற்சியை எங்கள் ஊர் மாணவ, மாணவியருக்கு ஏற்பாடு செய்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள். நீங்கள் பெற்ற தலைமைத்துவப் பயிற்சி உங்கள் எதிர்கால நல்வாழ்வுக்குத் துணை புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.



## பயிற்சிகள்

சரியானதை (✓) எனவும், பிழையானதை (×) எனவும் அடையாளமிடுக.

1. முதியோரை மதித்து நடப்பது சன்மார்க்கத்தில் கடமையாக்கப்பட வில்லை. (   )
2. “ஜமாஅத்” தொழுகை தலைமைத்துவப் பயிற்சியைத் தருகிறது. (   )
3. பயிற்சி முகாம்களில் மாணவர்கள் பங்கேற்பது நேரத்தை வீணாக்கும் ஒரு செயலாகும். (   )
4. நாம் தொழுகைகளை ஜமா-அத்தாக நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும். (   )
5. தஹஜ்ஜுத் தொழுகை பஜ்ருக்குப் பின்னர் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகையாகும். (   )


இலவச விநியோகத்திற்காக

## 3:2:2 மஸ்ஜிதின் புனிதம் பேணி நடப்போம்



- மஸ்ஜிதுகள் அல்லாஹ்வின் இல்லங்கள்.
- அவற்றில் இம்மை, மறுமை தொடர்பான விடயங்கள் இடம்பெறு கின்றன.
- ஒரு மு.:.மினின் அடையாளம் வெளிப்படும் ஓர் இடம் பள்ளி வாசலாகும்.
- அதனைச் சுத்தமாக வைத்திருப்பதும், சீராகப் பராமரிப்பதும் எமது கடமையாகும்.

முஸ்லிம் சமூகத்தின் கேந்திர நிலையம் மஸ்ஜிதாகும். மஸ்ஜித் என்ற சொல் ஸுஜூத் செய்யும் இடம் என்ற கருத்தைத் தருகின்றது. மக்காவிலுள்ள அல்லாஹ்வின் இல்லமான க.:.பதுல்லாவின் கிளைகளாகவே ஏனைய மஸ்ஜிதுகள் உள்ளன. எனவேதான் மஸ்ஜிதை அல்லாஹ்வின் இல்லம் என அழைக்கிறோம். இஸ்லாம் அனுமதித்த வணக்க வழிபாடுகள் மூலம் அது உயிரோட்டமானதாக இருக்க வேண்டும். அங்கு மார்க்கத்துக்கு முரணான எதுவும் நிகழக் கூடாது.

அதனை நிர்வகிக்கும் பொறுப்புடையோர் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் விசுவாசித்து, தொழுகையை நியமமாக நிறைவேற்றி, ஸகாத்தையும் கொடுத்து அல்லாஹ் அன்றி வேறெவருக்கும் அஞ்சாதவர்களாக இருக்க வேண்டுமென அல்குர்ஆன் சுட்டிக்காட்டுகின்றது. உலகில் மிகச் சிறந்த இடம் மஸ்ஜிதாகும். அதனை எப்போதும் தூய்மையாக வைத்துக் கொள்வது ஒவ்வொரு முஸ்லிமுடையதும் கடமையாகும். அங்கு தென்படும் சிறிய துரும்பைக் கூட அகற்றிவிடுவது பெரிய கூலியைத் தருவதாகும்.

"மஸ்ஜிதிலிருந்து எடுத்து வீசும் அசூசி கூட எனது உம்மத்தவருக்கு (மறுமையில்) கூலியை வழங்குமென எனக்குக் காண்பிக்கப்பட்டது" என ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: அபூதாவூத்)

ஆதலால் மஸ்ஜிதில் காணப்படும் சிறு அசூசிகளை அகற்றுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் மஸ்ஜித்தைக் கூட்டிப் பெருக்கி சுத்தமாக வைத்திருக்கவும் விருப்புக்கொள்ள வேண்டும்.

ஒரு நீக்ரோ பெண்மணி நபி ஸல்லல்லாஹு அலைஹவஸல்லம் அவர்களின் பள்ளியைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்து வந்தாள். மஸ்ஜிதுக்கு வழமையாக வந்த அப் பெண் திடீரெனக் காணாமற் போனதால் அவள் பற்றி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விசாரித்தார்கள். அவள் காலமான செய்தி கூறப்பட்டதும் நீங்கள் அதனை எனக்கு அறிவித்திருக்கக் கூடாதா? அவளது கப்றைக் காட்டுங்கள் என்று கூறிக் கொண்டே அங்கு சென்று அவளுக்காக ஜனாஸாத் தொழுகையை நிறைவேற்றினார்கள்.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு

ஆதாரம் : ஸஹீஹுல் புஹாரி

மஸ்ஜித்களை எப்போதும் நறுமணமுள்ள இடமாக வைத்திருப்பது சிறப்பானதாகும். குறிப்பாக மக்கள் ஒன்றுகூடும் பெருநாள், ஜுமுஆ நாள் போன்ற தினங்களில் நறுமணம் கமழச் செய்வது சிறந்ததாகும். கலீபா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் வெள்ளிக்கிழமை நாட்களில் மஸ்ஜிதுகளில் நறுமணம் கமழச் செய்யுமாறு கட்டளையிட்டார்கள்.

மஸ்ஜிதுகளில் மலக்குகள் சஞ்சரிக்கிறார்கள். மக்கள் கூடுகிறார்கள். ஆதலால் அங்கு வந்து போவோர் அதன் தூய்மையைப் பேணவேண்டும். அதனால்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் துர்வாடை வீசும் எதனையேனும் உட்கொண்டவர்கள் மஸ்ஜிதுக்கு வருவதைத் தடைசெய்தார்கள்.

"வெங்காயம், வெள்ளைப் பூடு முதலிய வாடை தரும் பொருட்களை உட்கொண்டவர்கள் எமது மஸ்ஜிதுகளை நெருங்காதீர்கள். நிச்சயமாக மனிதர்கள் நோவினைப்படுவனவற்றில் மலக்குகளும் நோவினைப்படுகின்றனர்." (முஸ்லிம்)

மஸ்ஜிதுகளில் இஃதிகாப் இருப்பது, குர்ஆன் ஓதுவது, தொழுவது. குர்ஆன், ஹதீஸ் முதலிய பாடங்களை நடாத்துவது என்பவற்றின் மூலம் அதனை உயிரோட்டமுள்ள இடமாக ஆக்கிக்கொள்ள வேண்டும். மார்க்கம் அனுமதிக்காத அம்சங்கள் அங்கு நடைபெறுவதன் மூலம், மஸ்ஜிதுகளின் தூய்மை கெட்டுவிடாமல் பாதுகாக்க வேண்டும். அது அல்லாஹ்வுக்காகவென்றே கட்டப்படுவதால் அதனை எவரும் அதிகாரம் செலுத்துமிடமாக பயன்படுத்திக்கொள்ளக்கூடாது.

وَّاَنَّ الْمَسٰجِدَ لِلّٰهِ فَلَا تَدْعُوْا مَعَ اللّٰهِ اَحَدًا ﴿١٨﴾

"நிச்சயமாக மஸ்ஜிதுகள் அல்லாஹ்வுக்காகவே நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அங்கு அல்லாஹ்வுடன் சேர்த்து மற்றெவரையும் அழைக்க வேண்டாம் என்று அல்லாஹ் கூறியுள்ளான்." ( அல்குர் ஆன் 72:18)

உரிய நேரத்தில் அதான் சொல்லப்படுவதும், தொழுகையில் கலந்து கொள்ளும் மக்களை அனுசரித்து ஜமாஅத் தொழுகை, ஜுமுஆத் தொழுகை போன்றன நடைபெறுவதும் மஸ்ஜிதுகளின் உயிரோட்டத்துக்கு மெருகூட்டுகின்றன. அங்கு சிரிப்பூட்டும் கதைகள், புராணங்கள் சொல்லப்படுவதைத் தவிர்த்து, அல்லாஹ்வும், ரஸூலும் கூறியவற்றைத் தெளிவாகக் கூறுவதிலும், விளக்குவதிலும் மஸ்ஜிதுகள் கவனம் செலுத்த வேண்டும்.

ஒற்றுமைக்கு வித்திடும் தலமாக மஸ்ஜிதுகள் இருக்க வேண்டும். சண்டை, சச்சரவு செய்து கொள்ளும் இடமாக அது அமையலாகாது. வருவோர் போவோர் உறங்கி எழும்பும் இடமாகவும், சிறுவர், பைத்தியக்காரர் ஓடித் திரியும் இடமாகவும் மஸ்ஜிதுகள் அமையலாகாது. வியாபாரம் செய்யும் இடமாகவோ, விளம்பரம் செய்யும் இடமாகவோ, காணாமற் போன பொருளைத் தேடும் இடமாகவோ அவை இருத்தலாகாது.

ஆகவே, மஸ்ஜிதுகளின் தூய்மையை எல்லா வழிகளிலும் பாதுகாத்து, அவற்றைச் சமூகத்தின் பயனுள்ள கேந்திர நிலையமாக வைத்துக் கொள்ள முயற்சிப்போமாக.

## பயிற்சிகள்

**சரியானதற்கு (✓) எனவும், பிழையானதற்கு (✕) எனவும் அடையாளமிடுக.**

1. மஸ்ஜிதுகள் தனிநபர் அதிகாரம் செலுத்துமிடமாகும். ( )

2. எந்த நிபந்தனைகளுமின்றி எவரும் மஸ்ஜிதுகளின் நிர்வாகியாக அமரலாம். ( )

3. மஸ்ஜிதுகளில்தான் இஃதிகாப் நிறைவேற்றப்பட வேண்டும். ( )

4. பைத்தியக்காரர் மஸ்ஜிதுக்கு சமூகமளிப்பதில் தவறில்லை. ( )

5. மஸ்ஜித் என்பது ஸுஜூது செய்யும் இடம் என்ற கருத்தைக் தருகிறது. ( )

(02) உமது கிராமத்திலுள்ள மஸ்ஜித் சமூகத் தேவைக்காக எவ்வாறெல்லாம் செயல்படுகிறது என்பது பற்றிச் சுருக்கமாக எழுதுக.



இலவச விநியோகத்திற்காக

## 3.3.1 கெட்ட குணங்களைத் தவிர்ப்போம்

- கெட்ட குணங்கள் ஷைத்தானின் தூண்டுதலால் ஏற்படுகின்றன.
- கெட்ட குணங்களிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேட வேண்டும்.
- எமது மார்க்கம் கெட்ட குணம் கொண்டோரை எச்சரிக்கிறது.
- பெருமையுள்ளவன் மற்றவரை மதிக்கமாட்டான்.

முன்னைய பாடத்தில் நற்குணங்களின் அவசியம், அதன் சிறப்பு என்பன பற்றிப் படித்தோம். அவ்வாறே தீய குணங்கள் பற்றித் தெரிந்து எச்சரிக்கையாக நடந்து கொள்ளவும் வேண்டும். தீய குணங்கள் அதிகமாக உள்ளன. அவை மற்றவரை வெறுப்படையச் செய்யும் தன்மை கொண்டவை. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

### 1. அநியாயம்

பிறரது உரிமையைப் பறிப்பது அநியாயம் எனப்படுகின்றது. எனவே, தக்க காரணமின்றி ஒருவரது உரிமைகளை மறுப்பவன் அநியாயக்காரன் ஆவான். அதன்படி

1. மற்றவரின் பொருளை வரம்பு மீறி அபகரித்துக் கொள்பவன்.
2. சத்தியத்தை மறைத்து அசத்தியத்துக்குத் துணைபோகும் மத்தியஸ்தர்.
3. பங்காளிக்குத் துரோகம் செய்பவன்.
4. மனைவி மக்களுக்குரிய உரிமைகளை வழங்காதவன்.
5. கணவனுக்குரியதைச் செலுத்தாத மனைவி.

ஆகியோர் அநியாயம் இழைத்தோராகவே கருதப்படுவர். அநியாயம் என்பது ஒரு சமூக நோயாகும். இஸ்லாம் அதனை அடியோடு இல்லாமற் செய்ய வேண்டும் என்றே விரும்புகிறது. அல்லாஹ் கூறியதாக ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்.

"எனது அடியார்களே! நிச்சயமாக அநியாயம் செய்வதை நான் என் மீது தடுத்திருக்கிறேன். உங்கள் மத்தியிலும் அநியாயம் செய்வதை தடுக்கப்பட்டதாக ஆக்கியுள்ளேன். எனவே, நீங்கள் ஒருவருக்கொருவர் அநியாயம் செய்து நடந்து கொள்ளாதீர்கள்'.' (முஸ்லிம்)

இக்கொடிய பாவத்துக்குத் துணை நிற்பதும் பாவமாகும். அவ்வாறு துணை நிற்பது எங்களை நரகிற்கு இட்டுச் செல்லும்.

"நீங்கள் அநியாயம் செய்தவர்பால் சாய்ந்து விடாதீர்கள். (அவ்வாறு நீங்கள் செய்தால்) நரக நெருப்பு உங்களையும் தீண்டிவிடும்."
(ஸூரத் ஹூத் - 113 வசனம்)

## 2. பொறாமை

மனிதனது நன்மைகளை அழித்துவிடும் ஒரு பயங்கர நோய் பொறாமை ஆகும். அது மனித இனத்துக்கு ஆபத்தானதாகும். நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மக்களான ஹாபில், காபில் என்ற இருவரில் ஒருவர் மற்றவரைக் கொன்றதும் பொறாமை காரணமாகவேயாகும். இத்துர்க்குணம் மனதில் இடம் பெற்றால் அவன் கோள் சொல்லவும், கொலை செய்யவும் தூண்டப்படுகிறான். பொறாமைப்படுபவன் அல்லாஹ் அளந்து கொடுப்பதைக் கொண்டு திருப்தியடையாதவனாவான்.

"அல்லாஹ் தன் பேரருளால் மனிதனுக்கு வழங்கியவற்றின் மீது அவர்கள் பொறாமைப்படுகிறார்களா" **(அல் குர்ஆன் 4:54)** என்று அல்லாஹ் வினா எழுப்புகிறான். ஒருவனிடம் பொறாமைக் குணம் வந்துவிட்டால் அவன் எப்போதுமே பிறர் பற்றியும், பிறரிடம் உள்ளவை பற்றியுமே சிந்திப்பான். அதைப்பெறுவதற்கு என்ன செய்யலாம் என்று திட்டம் தீட்டுவான். அவனது காலம் அதிலேயே கழியும். பொறாமைக் குணம் எல்லாத்தரத்தவரிடமும் உண்டாகும். அதே போன்று பொறாமையின் தீங்கு எல்லோரையுமே பாதிக்கும். அந்தத் தீங்குகளிலிருந்து தப்பிக்கொள்ள விரும்புபவர் தொழுகை முடிந்து பின்வரும் சூராக்களை ஓதி வர வேண்டும்.

1. ஸூரதுல் இஃக்லாஸ்
2. ஸூரதுல் ஃபலக்
3. ஸூரத்துன்னாஸ்

இந்த ஸூராக்களை ம.்.ரிப் தொழுகைக்குப் பின் மூன்று விடுத்தமும், ஏனைய தொழுகைகளுக்குப் பின் ஒரு விடுத்தமும் ஓதிவர வேண்டும்.

பொறாமைக் குணத்தை நாம் எப்போதும் வெறுக்க வேண்டும். அது எம்மில் ஆட்கொண்டு விடாதிருக்க எப்போதும் அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும். இக்குணத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கண்டிக்கிறார்கள்.

“பொறாமைக் குணத்தைப் பற்றி உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். நிச்சயமாக நெருப்பு விறகை பொசுக்கிவிடுவது போல் பொறாமை நன்மைகளைத் தின்றுவிடும்” (அபூதாவூத்)

எனவே, நாமும் இத் தீய குணத்தை விட்டு ஒதுங்கிக் கொள்வோமாக.

## 3. மோசடி

அல்லாஹ் தடுத்துள்ள குணங்களில் ஒன்று மோசடியாகும். அது எந்த உருவிலும் காணப்படலாம். மற்றவனின் சொத்தில் மோசடி நிகழலாம். பொதுச் சொத்தில் மோசடி ஏற்படலாம். ஏழை எளியவர்களின், அனாதைகளின் சொத்துக்களில் செயல்படுத்தப்படலாம். கூட்டு வியாபாரத்திலே உண்டாகலாம். அதனால்தான் எல்லாம் வல்ல அல்லாஹ் பின்வருமாறு கூறியுள்ளான்.

“உங்களுடைய செல்வங்களை உங்களுக்கிடையில் உரிமையின்றி உண்ணாதீர்கள். நீங்கள் அறிந்து கொண்டே (பிற) மனிதர்களின் செல்வங்களிலிருந்து ஒரு பகுதியைப் பாவமான முறையில் (நீங்கள்) உண்ணுவதற்காக அவற்றை அதிகாரிகளின்பால் கொண்டு செல்லாதீர்கள்” (ஸூரா அல் பகரா: 188)

ஒருவர் நம்மிடம் தந்து வைக்கும் பொருள்களில், அல்லது இரவலாகவோ, கடனாகவோ பெற்றவற்றில் நாம் பிழையாக நடந்து கொள்ளலாகாது. நம்பித் தந்ததைக் கேட்கும் போது ஒப்படைக்கவும், எடுக்கும் கடனை, இரவல் போன்றவற்றைத் தவணை வரும் போது ஒப்படைக்கவும் நாம் பழகிக்கொள்ள வேண்டும். ஏதேனும் ஒன்றுக்குப் பொறுப்பானால் அதற்குரிய காலம் முடியமுன் தன் பொறுப்பிலுள்ளதை உரிய இடத்தில் ஒப்படைப்பது கடமையாகும். அப்படிச் செய்யாதிருப்பது மோசடியாகும்.

## 4. முகஸ்துதி

முகஸ்துதி ஒரு கெட்ட குணமாகும். அது எமது அமல்களின் நன்மைகளை இல்லாமற் செய்துவிடும். அல்லாஹ்வுக்கு இணை வைப்பதை ஷிர்க் என்பது போல வணக்க வழிபாடுகளில் முகஸ்துதி ஏற்படுவதும் சின்ன ஷிர்க் எனப்படுகின்றது. பிறர் பார்க்க வேண்டும் என்பதற்காகப் புரியப்படும் எல்லாக் காரியங்களும் பயனற்றவையாக மாறிவிடுகின்றன.

தொழுதாலோ, அல்லது வேறு ஏதும் நன்மை செய்தாலோ அது அல்லாஹ் ஒருவனுக்காக மாத்திரம் என்ற தூய எண்ணத்தோடு நிறைவேற்றப்பட வேண்டும்.

மனத்தூய்மை இல்லாத எச்செயலும் அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்படு வதில்லை. மறுமையில் அல்லாஹ்வைச் சந்தித்து நற்கூலி பெற விரும்பும் ஒருவர் தான் நிறைவேற்றும் காரியங்களை அல்லாஹ்வுக்கென்ற தூய எண்ணத்துடன் செய்ய வேண்டும். அதனால்தான் எல்லா அமல்களுக்கும் “நிய்யத்” (எண்ணம்) சீராக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகக் கூறப்பட்டுள்ளது. அது தூய்மையாக அமைந்தால் நிறைந்த கூலி கிடைக்கும். அது கெட்டதாக அமைந்தால் பெருநஷ்டம் ஏற்படும். எனவே நாம் எமது எந்தச் செயலிலும் முகஸ்துதி ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

## 5. பெருமை

இது மக்கள் மத்தியில் பகைமையையும், வெறுப்பையும், பிளவையும் உண்டுபண்ணும் ஒரு சமூக நோயாகும். தன்னிடமுள்ள ஏதேனுமொன்றை வைத்துப் பெருமை பாராட்டுகின்றவருக்குத் தன் குறைகள் தென்படுவதில்லை. பிறர் பேச்சுக்கு செவிமடுக்க அவனது உள்ளம் இடம் கொடுப்பதில்லை. முன்னைய சமூகத்தவர்களில் பலர் பெருமை காரணமாக அழிவுக்கு ஆளானார்கள். நபி ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம், நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் போன்ற நபிமார்களின் உம்மத்தவர்கள் அந்த நபிமாரின் போதனையை ஏற்காது பெருமையடித்து வாழ்ந்தனர். இறுதியில் அல்லாஹ்வின் கோபத்துக்குள்ளாகி அழிந்து போயினர்.

மனிதன் அழகை வைத்துப் பெருமைப்படலாம். சக்தியை வைத்துப் பெருமைப்படலாம். செல்வத்தை வைத்தும் செல்வாக்கை வைத்தும் பெருமைப்படலாம். எனினும், இவையொன்றும் நிலைத்து நிற்பனவல்ல. பெருமைப்படுவதற்கு தகுதியானவையுமல்ல.

நோயொன்று வந்துவிட்டால் போதும். ஆளையே படுக்கையில் போட்டு விடும். அழகெல்லாம் மங்கிவிடும். ஆளையே இனம் காண முடியாதவாறு மாற்றிவிடும். இப்போது அந்தப் பெருமை எங்கே போய்விட்டது?

தனது சக்தியை வைத்துப் பெருமையடித்தவன் நிலையும் இவ்வாறுதான். நோயினாலோ, வேறு காரணங்களாலோ பலவீனப்படுவான். அப்போது அவனது பெருமை எங்கோ ஒழிந்துவிடுகிறது. உடலுறுப்பொன்று முறிந்து விட்டால் போதும் முனங்கி, முனங்கியே காலம் கழியும்.

செல்வத்தை வைத்துப் பெருமையடித்தவன் அதை இழந்ததும் கீழ்மை யடைகிறான். காற்றோ, மழையோ, வெள்ளமோ, நெருப்போ அவனது செல்வத்தை அழித்துவிடலாம்.

ஆதலால், முஸ்லிம்கள் எப்பொருளை வைத்தும் பெருமையடிக்கக் கூடாது. பெருமைக்குரியவன் அல்லாஹ் மட்டுமே.

ஹஸரத் லுக்மான் அவர்கள் தன் மகனுக்கு பின்வருமாறு போதனை செய்தார்கள்.

يَـٰبُنَيَّ أَقِمِ ٱلصَّلَوٰةَ وَأْمُرْ
بِٱلْمَعْرُوفِ وَٱنْهَ عَنِ ٱلْمُنكَرِ
وَٱصْبِرْ عَلَىٰ مَآ أَصَابَكَ ۖ إِنَّ
ذَٰلِكَ مِنْ عَزْمِ ٱلْأُمُورِ ۞

وَلَا تُصَعِّرْ خَدَّكَ لِلنَّاسِ وَلَا تَمْشِ
فِى ٱلْأَرْضِ مَرَحًا ۖ إِنَّ ٱللَّهَ لَا يُحِبُّ
كُلَّ مُخْتَالٍ فَخُورٍ ۞

“என்னருமை மகனே! நீ தொழுகையை நிலை நாட்டுவாயாக. நல்லதை ஏவுவாயாக. தீமையைத் தடுப்பாயாக. உனக்கேற்படும் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வாயாக. நிச்சயமாக அவ்வாறு நடந்து கொள்வது உறுதிமிக்க காரியங்களைச் சேர்ந்ததாகும். மேலும் பெருமை கொண்டு மனிதர்களை விட்டும் உன் முகத்தைத் திருப்பி விடாதே. இன்னும் பூமியில் கர்வமாகவும் நடந்து செல்லாதே. நிச்சயமாக அல்லாஹ் தற்பெருமையோடு கர்வங் கொண்டு நடப்போரை நேசிக்கமாட்டான்.”

(அல் குர்ஆன் 31:17-18)

இது குர்ஆன் கூறும் ஒரு அழகிய போதனையாகும். பெருமை ஈற்றில் சிறுமையையே தேடித் தரும். நரகம் செல்ல வழிவகுக்கும்.

## 6. சோம்பலும், இயலாமையும்

இவை ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வெறுத்த குணங்களாகும். இத்துர்க்குணங்களிலிருந்து அவர்கள் பாதுகாவல் தேடினார்கள். மு.்.மின் எப்போதும் பலவானாக, சுறுசுறுப்புடையவனாக இருக்க வேண்டும். சோம்பிக் கிடப்பதையும், பிறர் தயவில் உண்டு கழிப்பதையும் இஸ்லாம் வெறுக்கிறது. அதனால்தான் அதிகாலை முதல் நித்திரைக்குச் செல்லும் வரை தொழுகை முதலிய கடமைகள் மூலம் உற்சாகமாக இருக்க வழிகாட்டுகிறது.

சோம்பல் குடிகொண்ட ஒருவன் எதனையும் சாதிக்கமாட்டான். தனக்கோ சமூகத்துக்கோ எதனையும் செய்யமாட்டான். எந்த வேலையையும் ஒன்றில் பிற்படுத்துவான் இன்றேல் கைவிடுவான். அவன் எதிர்பார்க்கும் முடிவை அடைந்து கொள்ளவேமாட்டான்.

ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அடிக்கடி பின்வரும் துஆவை ஓதி வந்தார்கள்.

«اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْهَمِّ
وَالْحَزَنِ، وَالْعَجْزِ وَالْكَسَلِ، وَالْبُخْلِ
وَالْجُبْنِ، وَضَلَعِ الدَّيْنِ وَغَلَبَةِ الرِّجَالِ»

"இறைவா! கவலை, சஞ்சலம் என்பவற்றிலிருந்து உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். இயலாமையிலிருந்தும், சோம்பலிலிருந்தும் பாதுகாவல் தேடுகிறேன். கோழைத்தனம், கஞ்சத்தனம் முதலியவற்றிலிருந்தும் காவல் தேடுகிறேன். கடன் தொல்லை, மனிதரின் அடக்குமுறை என்பனவற்றிலிருந்தும் பாதுகாவல் தேடுகிறேன்."

மனித வாழ்க்கைக்கு எப்போதும் சவாலாக அமையும் பல இடர்பாடு களிலிருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாதுகாவல் தேடியிருப்பது எமக்கெல்லாம் படிப்பினையாக அமைகின்றது. எனவே, நாமும் மேற்படி துஆவை ஓதி உற்சாகத்தோடும், உயிரோட்டத்தோடும் வாழ முயற்சிப்போமாக.

## பயிற்சிகள்

1 பெருமையின் கெடுதி என்பது பற்றிக் கற்பனையாகவோ, உண்மைச் சம்பவத்தை வைத்தோ கதையொன்றை உருவாக்கி எழுதுக.

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. பெருமை காரணமாக அழிவுக்குள்ளான இரண்டு உம்மத்தினர்களும் யாவர்?
2. லுக்மான் தன் மகனுக்குச் செய்த போதனையைச் சுருக்கமாக எழுதுக.
3. மனிதனிடம் காணப்படக்கூடாத கெட்ட குணங்கள் சிலவற்றைப் பட்டியற்படுத்துக.